**OS.No**. 38/2017

**PW** 2- முத்துக்குமார் த/பெ. சுப்பன்னன்

நாள். 02.02.2023

<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 1 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. ராஜேஷ்வரி பீலிசிங் மற்றும் பிரின்ஸ் டையிங் நிறுவனம் தொடர்பான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. மாமனார் உயிரோடு இருந்த போதே பிரின்ஸ் டையிங் நிறுவனத்தின் மிசின்களை விற்று வங்கிக் கடன்களை கட்டியுள்ளார் என்றால் இல்லை. அவர் இறந்த பிறகு வாரிசுகள் அனைவரும் சேர்ந்து கட்டினோம். எந்த வங்கிக்கு கட்டினோம் என்றால் திருப்பூர் கார்பிரேசன் வங்கிக் கட்டினோம். அவ்வாறு நாங்கள் பணம் கட்டியதை காட்ட ஆவணங்கள் உள்ளதா என்றால் என்னுடைய மனைவியின் சகோதரியிடம் உள்ளது.

2. வங்கிக் கடன் முழுவதையும் என்னுடைய மாமியார் சரஸ்வதி தான் செலுத்தினார் என்றால் எனக்கு தெரிந்த வரை இல்லை. ஏனேன்றால் அவருக்கு எந்து வருமானமும் இல்லை. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் பங்குச்சந்தை வர்த்தகம் செய்து வருகிறேன். என்னுடைய மைத்துனன் கோவிந்தராஜ் எப்போது இறந்தார் என்றால் 2012 ல் இறந்தார். நவம்பரா டிசம்பரா ஞாபகம்இல்லை. அவர் என்ன தொழில் செய்தார் என்றால் சரியாக ஞாபகம் இல்லை.

3. என்னுடைய மாமனார் உயிரோடு இருந்த போது அவருடைய பெண் பிள்ளைகள் ஆண் பிள்ளைகள் தனித்தனியாக இருந்தார்கள் என்றால் என்னுடைய மைத்துனர்கள் மாமனாருடன் ஒரே குடும்பமாக இருந்தார்கள் என்னுடைய மனைவியும அவருடைய சகோதரியும் தனித்தனியாக கணவர் வீட்டில் இருந்தார்கள். மாமனாரும் மைத்துனர்களும் எந்த வீட்டில் இருந்தார்கள் என்றால் முருகம்பாளையம் மாமனார் வீட்டில் இருந்தார்கள். அந்த வீடு என்னுடைய மாமியாருக்கு அவருடைய பெற்றேர்கள் வீட்டில் கொடுத்தது என்றால் அது தெரியவில்லை.

4. என்னுடைய மைத்துனர்களும் திருமணம் ஆகி தனித்தனியாக இருந்தார்கள் என்றாலும் என்னுடைய மாமியாரும் மாமனாரும் முருகம்பாளையம் வீட்டில் தனியாகத் தான் இருந்தார்கள் என்றாலும் சரியல்ல. நான் என்ன படித்துள்ளேன் என்றால்

B.A.History 2ம் வருடம் வரை படித்துள்ளேன். என்னுடைய மாமனாருக்கு நரம்பு கோளாறு ரத்த அழுத்தம் மற்றும் சர்கரை நோய் பாதிப்புகள் 2011 ஜனவரி மாதத்திலிருந்து வந்து படித்த படிக்கையாக இருந்து வந்ததாக சொல்லியுள்ளேன் அவரை எந்த மருத்துவமனையில் எவ்வளவு நட்கள் சிகிச்சை பெற்றார் என்றால் அந்த விவரம் என்னுடைய மைத்துனருக்கு தான் தெரியும். நான் அவரை மருத்துவமனையில் சென்று பார்த்தேனா என்றால் இல்லை வீட்டில் தான் பார்த்தேன்.

5. இறப்புக்கு 1 வாரம் முன்பு கோவை குப்புசாமி நாயுடு மருத்துவமனையில் இருதய நோய்க்காக உள்நோயாலியாக தங்கி சிகிச்சை பெற்றார் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நான் கூறுவது போல் அவர் படுத்தபடியாக இருக்க வில்லை என்றாலும் நான் சொல்லும் நோய்களும் அவருக்கு இல்லை என்றாலும் இறப்பதற்கு 1 வாரம் முன்பு ஏற்பட்ட இருதய நோய் காரணம் ஆகத்தான் இறந்து விட்டார் என்றாலும் சரியல்ல. என்னுடைய மனைவி அவருடைய சகோதரி மாமியார் சேர்ந்து மாமனாரிடம் செட்டில்மெண்ட் எழுதிவாங்கிக்கொள்ளலாம் என்று கூறிய போது அவர் உடல் நிலை காரணமாக பத்திரம் எதுவும் எழுதிக்கொள்ள வேண்டாம் என சொன்னேனா என்றால் இல்லை.

6. அவ்வாறு என்னுடைய மனைவி அவருடைய சகோதரி மாமியார் சேர்ந்து மாமனாரிடம் செட்டில்மெண்ட் எழுதிவாங்கிக்கொள்ளலாம் என்று இருந்த விவரத்தை என்னுடைய மைத்துனர்களிடன் சொன்னேனா என்றால் இல்லை. பத்திரம் எழுவதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பு சொன்னாகள் என்றால் 19 ம் தேதி சொன்னார்கள் 20 ம் தேதி தயார் செய்து 21ம் தேதி எழுதி பதிவு செய்தார்கள். முத்திரை தாள் பேப்பர் எங்கு வாங்கினார்கள் என்றால் சக்திவடிவேல் என்ற பத்திர எழுத்தர் வாங்கினார். எந்த தேதியில் வாங்கினார்கள் என்றால் தெரியவில்லை. 20–21 ல் வாங்கி இருக்கலாம்.

7. நான் கூறுவது போல் என்னுடைய மாமனார் உடல் நிலை சரியில்லாமல் இல்லை எனறாலும் நல்ல உடல்நிலையும் மன நிலையில் இருந்த போதுதான் 20.7.2011 தேதியில் தெய்வசிகாமணி என்பவருடன் சென்று பத்திர எழுத்தர் சக்திவடிவேல் சந்தித்து தன் மனைவி பெயருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் தயார் செய்ய சொன்னார் என்றால் சரியல்ல. நான் பத்திரம் செய்ய சென்ற தேதி என்ன என்றால் 20. நான் ஏதாவது ஆவணம் கொண்டு சென்றேனா என்றால் பிரின்ஸ் டையிங் நிறுவனம் இருந்த இடத்திற்கான பத்திரம்கொண்டு சென்றேன். அது யார்

கொடுத்தார்கள் என்றால் என்னுடைய மனைவியின் சகோதரியும் மாமியாரும் கொடுத்தார்கள்.

8. தற்போது என்னிடம் காட்டப்படும் அசல் தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் சாட்சிகளிலுள்ள முதல் கையெழுத்து என்னுடையது என்றால் ஆமாம் . 2வது என்னுடைன் வந்தவர் போட்டார் என்றால் இல்லை. என்னுடைய மனைவியின் சகோதரியும் மாமியாரும் தான் அழைத்து வந்தார்கள். பத்திர அலுவலகத்திற்கு எப்போது சொன்றோம் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நண்பகல் நேரம் இருக்கும். தற்போது என்னிடம் காட்டப்படும் அசல் தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள போட்டோ ஆனது என்னுடைய மாமனார் உடையது என்றால ஆமாம்.

9. சார் பதிவாளர் அலுவலகத்திற்குள் இன்னார் என்று நிரூபித்தவர் என சாட்சி கையொப்பம் செய்துள்ள முதல் கையெழுத்து என்னுடையது என்றால் ஆமாம். இன்னொரு கையெழுத்து ஆக செய்துள்ள ஜெயக்குமார் என்றால் ஆமாம். மேற்படி ஜெயக்குமாரை நான் தான்அழைத்து வந்தேன் என்றால் இல்லை. என் மாமனார் பத்திர அலுவலகத்திற்கும் சார் பதிவாளர் அலுவலகத்திற்கும் வந்தார் என்றால் ஆமாம். கைதாங்கலாக அழைத்து வந்தார்கள். எவ்வளவு நேரம் பத்திர அலுவலகத்தில் இருந்தோம் என்றால் நான் அரை மணி நேரம்இருந்தேன். கடைசியாக சென்று கையெழுத்து போட்டுவிட்டு வந்துவிட்டேன்.

10. பத்திர சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்வதற்கான முத்திரை கட்டணம் என்னுடைய மாமனார் தான் செலுத்தி பதிவுக்காக தாக்கல் செய்தார் எனறால் இல்லை. பதிவு செய்ததற்கான கைரேகையும் கையொப்பம் செய்தார் என்றால் என் முன்னிலையில் எதுவும் போடவில்லை. அந்த உடல்நிலையில் அவர் இல்லை. என்னுடைய மாமனாருக்கு எழுத படிக்கத்தெரியாது. என்னுடைய மாமனாருக்கு எழுத படிக்கத்தெரியாது என்ற பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பத்திரத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவுக்காக தாக்கல் செய்த போது சார் பதிவாளர் என்னுடைய மாமனாரை விசாரித்து ஆவணம் பதிவு செய்யும் விவரத்தை உறுதி செய்துஎன்னுடைய மாமனார் ஒப்புக்கொண்டு தான் பதிவு செய்யப்பட்டது என்றால் என் முன்னிலையில் எதுவும் நடைபெறவில்லை. நான் கடைசியாக தான் வந்தேன். சார் பதிவாளர் விசாரித்த போது நானம் என்னுடைய மாமனாரும் மற்றேபாரு சாட்சியான ஜெயக்குமாரும் இருந்தோம் என்றாலும் தற்போது அதனை மறைத்து பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பத்திர எழுத்தர் சக்தி வடிவேல் அலுவலகத்தில் வைத்து மாமனார் செட்டில்மெண்ட் பத்திரத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்து செய்தார் என்றாலும் அதை நானும் மற்றொரு சாட்சியான ஜெயக்குமாரும் உடன் இருந்த தெய்வசிகாமணியும் பத்திர எழுத்தரும் நேரில் பார்த்தோம் என்றால் சரியல்ல. அதேபோல் நானும் மற்றொரு சாட்சியான ஜெயக்குமாரும் சாட்சி கையொப்பம் செய்தததையும் என்னுடைய மாமனார் ராமசாமிக் கவுண்டர் பார்த்தார் என்றால் சரியல்ல. தானசெட்டில்மெண்ட் பத்திரம் பதிவு செய்த அன்று சார்பதிவாளர் அலுவலகத்திற்கு என்னுடைய மாமியாரோ என மனைவியின் சகோதரியும் வரவில்லை என்றால் ஆமாம். சாட்சி மீண்டும் பத்திரம தயார் செய்வதற்கு பத்திர அலுவலகத்திற்கு மாமியாரும் சகோதரியும வரவில்லை எனவும் பத்திரம பதிவு செய்த போது சார் பதிவாளர் அலுவலகத்திற்கு மாமனாரை என்னுடைய மாமியாரும் என மனைவியின் சகோதரியும் தான் கைதாங்கலாக அழைத்து வந்ததாக தெரிவித்தார்.முதலில் என்னுடைய மாமியாரும் என மனைவியின் சகோதரியும் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வரவில்லை என சொல்லிவிட்டு தற்போது அதனை மாற்றி பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க சம்மன் வந்ததா என்றால் இல்லை. செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என விலம்புகை செய்தால் என்னுடைய மனைவிக்கு 6ல் 1 பங்கு பாகம் வரும் என்றால் ஆமாம். என் மாமனார் வாரிசுகள் அனைவருக்கும் வரும். என்னுடைய மாமனார் நல்ல உடல்நிலையிலும் நல்ல மனநிலையிலும தன்னட்சியாக அவர்விருப்பத்தின் பேரில் தயார் செய்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் பத்திரம தயார் செய்த போதும் பதிவு செய்த போதும் உடன் இருந்தது சாட்ச கையெழுத்து செய்து விட்டு தற்போது வாதியின் தூண்டதலின் பேரில் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதியின் தகப்பனார் ராமசாமி பிரின்ஸ் டையிங் என்ற பெயரில் தனிநபர் நிறுவனம் நடத்தி வந்தார் என்றால் இல்லை அது கூட்டாண்மை நிறுவனம். மேற்படி வழக்கு சொத்தினை மேற்படி பிரின்ஸ் டையிங் நிறுவனத்திற்காக அடமான வைத்து அதன் பெயரில் கார்பிரேசன் வங்கி திருப்பூர் கிளையில் கடன் பெற்று இருந்தார் என்றால் ஆமாம். அவர் பெற்ற கடன் முழுமையாக தீர்க்கப்பட்டுவிட்டது என்றால் ஆமாம். இந்த வழக்கற்கும் 7ம் பிரதிவாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால்

சரியல்ல. 7ம் பிரதிவாதிக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.

**அசல் வழக்கு எண் 98/21 ல் 8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

ஒம்/– M.மேகலாமைதிலி
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.